பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

22 06 2017 07 15 செய்தி ஆசிரியர்

வியாழக்கிழமை இரவு வி. பழனிச்சாமி

ஆகாசவாணி செய்திகள் வாசிப்பவர் - வடிவழகி கபிலன்

தலைப்புச்செய்திகள்

1) குடியரசுத் தலைவர் வேட்பளராக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் சார்பில் மக்களவை முன்னாள் தலைவர் திருமதி. மீரா குமார் நிறுத்தப்பட்டுள்ளார்.

2) சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை அறிமுகப்படுத்த ஒத்துழைப்பு அளித்தற்காக மாநில முதலமைச்சர்களுக்கு மத்திய அமைச்சரவை நன்றி தெரிவித்துள்ளது.

3) புனே மாநகராட்சியின் பங்குகள் மும்பை பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன. மத்திய நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு வெங்கையா நாயுடு பங்குகளை அறிமுகம் செய்தார்.

4) ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் நடத்திய கார்குண்டு வெடிப்பு சம்பவத்தில் 29 பேர் உயிரிழந்தனர்.

5) ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து, சாய்னா நேவல், ஸ்ரீகாந்த் , சாய் ப்ரீனீத் ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள் -

<><><><><><

எதிர்கட்சிகள் சார்பில் போட்டியிடும் குடியரசுத் தலைவர் வேட்பளராக மக்களவை முன்னாள் தலைவர் திருமதி. மீராகுமார் அறிவிக்கப்பட்டுள்ளார்.

எதிர்கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளரை இறுதி செய்ய தில்லியில் இன்று காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் பிரதமர் திரு. மன்மோகன் சிங், மார்க்சிஸ்ட் கம்யுனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு சீதாராம் யெச்சூரி, ராஷ்ட்ரீய ஜனதா தள தலைவர்திரு லாலு பிரசாத் யாதவ், தேசியவாத காங்கிரஸ் தலைவர் திரு சரத்பவார், சமாஜ்வாதி கட்சியின் ராம்கோபால் யாதவ், பகுஜன் சமாஜ் கட்சியின் சதீஷ் சந்திர மிஸ்ரா, திமுகவின் மாநிலங்களவை உறுப்பினர் திருமதி கனிமொழி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

குடியரசு தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள திருமதி. மீரா குமார் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் மக்களவை தலைவராக பதவி வகித்தவர். 72 வயதாகும் அவர், மக்களவையின் முதல் பெண் தலைவர் என்ற பெருமையை பெற்றவர் ஆவார்.

முன்னாள் துணைப் பிரதமர் பாபு ஜெகஜுவன் ராமின் மகளாவார்.

இதனிடையே, தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் நாளை காலை மணி 11.,30 க்கு வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளார்.

இதில், பிஜேபி ஆளும் மாநிலங்களைச் சேர்ந்த முதலமைச்சர்களும், தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளைச் சேர்ந்த மூத்த தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

<><><><><

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பை நடைமுறைபடுத்த ஒத்துழைப்பு வழங்கிய மாநில முதலமைச்சர்களுக்கு மத்திய அமைச்சரவை நன்றி தெரிவித்துள்ளது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலமைச்சர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வரிவிதிப்பு முறை சுதந்திர இந்தியாவின் மிகப் பெரிய வரி சீர்திருத்தம் என்றும் அமைச்சரவை தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

<><><><><

ஜி எஸ் டி வரிவிதிப்பு அமலுக்கு வருவதன் மூலம் தேசிய அளவிலான சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு உர்ஜித் படேல் அறிவித்துள்ளார்.

மும்பை தொழில்வணிக கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், மின்னனு பண பரிமாற்ற புரட்சியின் ஒரு அங்கம் ஜி எஸ் டி என்று கூறினார்.

<><><><><

கலால் வரி , சேவை வரி மற்றும் வாட் வரி செலுத்துவோர் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பில் பதிவு செய்து கொள்வதற்காக வரும் 25-ஆம் தேதி முதல் புதிய இணையதள வசதியை தொடங்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வருவாய்துறை செயலர் திரு. ஹஸ்முக் ஆதியா, வணிகர்கள் தாங்களாகவே இந்த இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

இணையதளத்தில் பதிவு செய்யும் நடைமுறை ஏற்கனவே இரண்டு சுற்றுகளாக நடந்து முடிந்துள்ளது. 80 சதவிகிதம் பேர் ஜி எஸ் டி வரிவிதிப்பு முறைக்கு ஏற்கனவே பதிவு செய்துள்ளனர்.

வரும் ஜூலை ஒன்றாம் தேதி முதல் நாடு முழுவதும் ஜி எஸ் டி வரிவிதிப்பு அமலுக்கு வருகிறது.

<><><><><

கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின் மரணத் தண்டனையை ரத்து செய்வது குறித்து 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு முடிவு செய்யும் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

பாபு என்கிற கேத்தன் என்பவருக்கு குற்ற வழக்கு ஒன்றில் மரணத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேல்முறையீடுகளில் அவரது தண்டனை உறுதி செய்யப்பட்டது. குடியரசுத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜியும், அவரது கருணை மனுவை நிராகரித்தார்.

இந்நிலையில், தண்டனையை ரத்து செய்யக்கோரி கேத்தன் தாக்கல் செய்திருந்த மனுவை உச்சநீதிமன்றத்தின் விடுமுறை கால அமர்வு இன்று விசாரித்தது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் திரு எஸ் கே கவுல் மற்றும் திரு. டி ஒய் சந்திர சூட் ஆகியோர், இந்த மனு மீதான தீர்ப்பை விடுமுறை காலத்திற்கு பின் 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு வழங்கும் என்று தெரிவித்தனர்.

<><><><><

பிரதமர் திரு நரேந்திரமோடி போர்ச்சுக்கல், அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய மூன்று நாடுகளில் அரசுமுறைப் பயணமாக நாளை மறுநாள் புதுதில்லியிருந்து புறப்பட்டுச் செல்கிறார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வெளியுறவு செய்தித் தொடர்பாளர் திரு கோபால் பாக்லே, வரும் 26 ஆம் தேதியன்று பிரதமர் திரு நரேந்திரமோடி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை சந்தித்து ஆலோசனை மேற்கொள்ளவுள்ளதாக கூறினார்.

இந்த சந்திப்பின் மூலம், வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு போன்ற துறைகளில் அமெரிக்காவுடனான ஒத்துழைப்பு வலுப்பெறும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே உள்ள சர்ச்சைகள் குறித்து இருநாடுகளும் பரஸ்பர ஆலோசனையின் மூலம் தீர்வு காண்பதற்கு முயற்சி மேற்கொண்டு வருவதாக கோபால் பாக்லே கூறினார்.

<><><><><

சவுதி அரேபியாவில் விதிக்கப்பட்டுள்ள குடும்ப வரி தொடர்பாக அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்படும் என வெளியுறவு துறை செய்தித் தொடர்பாளர் திரு. கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இந்த வரி விசாவுக்கான கட்டணம் அல்ல என்று அவர் தெளிவுப்படுத்தினார்.

சவுதி அரேபியாவில் வேலை செய்யும் இந்தியர்கள் தங்களது குடும்பத்தினரை அழைத்துச் சென்றால் வரி செலுத்த வேண்டும் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஜூலை மாதம் முதல் இது அமலுக்கு வருகிறது.

<><><><><

தெற்கு கஷ்மீரில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து, அப்பகுதியில் பதற்றம் நிலவுவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது.

ஜம்மு கஷ்மீர் புல்வாமா மாவட்டத்தில் இன்று காலை பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து புல்வாமா மாவட்டத்திலும் அருகில் உள்ள மாவட்டங்களிலும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

சட்டம் ஒழுங்கை பாதுகாக்க கூடுதல் காவல்துறையினரும், பாதுகாப்பு படையினரும் அப்பகுதியில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கஷ்மீர் பள்ளத்தாக்கில் அனைத்து ரயில்களும் இன்று ரத்து செய்யப்பட்டன.

<><><><><

மும்பை பங்குச் சந்தையில் புனே மாநகராட்சி சார்பில் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

இதற்காக இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய நகர்புற மேம்பாடு மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. வெங்கையா நாயுடு கலந்து கொண்டு பங்குகளை அறிமுகம் செய்தார்.

இந்தியாவில் மாநகராட்சிகள் சார்பில் வெயிடப்படும் பங்கு பத்திரங்களில் இதுவே அதிக மதிப்புடையதாகும்.

இரண்டாயிரத்து 264 கோடி ரூபாய் மதிப்பிலான பங்கு பத்திரங்கள் மும்பை பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

இதில் கிடைக்கும் லாபத் தொகை புனே மாநகராட்சிக்கு சென்றடையும்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், மாநகரங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த அதிக நிதி தேவைப்படுவதாகவும், அதனை பூர்த்தி செய்ய இதுபோன்ற பங்கு பத்திரங்கள் பெரிதும் உதவும் என்றும் கூறினார்.

நீண்ட காலத்திற்கு பின்னர், மாநகராட்சி சார்பில் பங்கு பத்திரங்கள் வெளியிடப்பட்டிருப்பதற்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நாவிஸ், மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், பாரத் ஸ்டேட் வங்கியின் தலைவர் திருமதி அருந்ததி பட்டாச்சார்யா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<><><><><

கூர்க்காலந்து தனி மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்று சிக்கிம் மாநில முதலமைச்சர் திரு. பவன் சாம்லிங் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங்கிற்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் டார்ஜிலிங் பகுதி மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

டார்ஜிலிங் நடைபெறும் வன்முறை சம்பவங்களால் சிக்கிம் மாநிலம் பெரிதும் பாதிக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கூர்க்காலாந்து தனி மாநிலம் அமைக்கப்பட்டால் அந்தப் பகுதியில் அமைதி ஏற்படுவதுடன் சிக்கிம் மாநிலம் அதனால் பெரிதும் பயனடையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<><><><><

கத்தாரில் வசிக்கும் இந்தியர்களை தற்போதைக்கு அந்நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டிய தேவையில்லை என்று வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் திரு கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களை சந்தித்த அவர், ரம்ஜான் பண்டிகையையொட்டி கத்தாரில் உள்ள இந்தியர்கள், தாயகம் வருவதற்கு கூடுதல் விமானங்கள் இயக்கப்படும் என்றார்.

அந்நாட்டில் வாழும் இந்தியர்கள் பாதுகாப்புடன் இருப்பதாகவும், அங்குள்ள சூழ்நிலை கட்டுக்குள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<><><><><

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் ஒழிக்கப்பட்ட நான்காவது மாநிலமாக உத்தரகண்ட் அறிவிக்கப்பட்டுள்ளது.

டேராடூனில் நடைபெற்ற தூய்மை இந்தியா திட்ட நிகழ்ச்சியில் மத்திய அமைச்சர் திரு நரேந்திர சிங் தோமர் கலந்து கொண்டு இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

ஏற்கனவே சிக்கிம், இமாச்சலப்பிரதேசம், கேரளா ஆகிய மாநிலங்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

<><><><><

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் நடத்திய கார்குண்டு தாக்குதலில் தாக்குதலில் 29 பேர் உயிரிழந்தனர்.

ஹெல்மண்ட் மாகாண தலைநகரான லஸ்கர் கா நகரில் வங்கி ஒன்றின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 60-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு எந்த ஒரு அமைப்பும் இதுவரை பொறுப்பு ஏற்கவில்லை.

<><><><><

பீகார் மாநிலத்தின் தற்காலிக ஆளுநராக மேற்கு வங்க ஆளுநர் திரு கேசரிநாத் திரிபாதி இன்று பதவியேற்றுக் கொண்டார்.

பாட்னா உயர்நீதிமன்ற நீதிபதி ராஜேந்திர மேனன் அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு நிதிஷ் குமார், துணை முதலமைச்சர் தாஜேஸ்வி பிரசாத் யாதவ், எதிர்க்கட்சித் தலைவர் திரு பிரேம் குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

<><><><><

பி எஸ் எல் வி சி - 38 ராக்கெட்டை விண்ணில் செலுத்துவதற்கான 28 மணிநேர கவுண்ட் டவுன் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஷ் தவான் ஏவுதளத்தில் இன்று காலை தொடங்கியது.

இந்த ராக்கெட் நாளை காலை மணி 9 - 29-க்கு கார்ட்டோ சாட் இரண்டு இ மற்றும் 30 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தவுள்ளது.

இவற்றில் 29 செயற்கைக்கோள் 14 நாடுகளைச் சேர்ந்தவையாகும்.

மற்றொரு செயற்கைக் கோள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனம் ஒன்றால் வடிவமைக்கப்பட்டது.

<><><><><

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், சாய் பிரனீத், சாய்னா நேவால், பி வி சிந்து ஆகியோர் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் ஸ்ரீகாந்த் கொரியாவின் சோன் வான் ஹோ-வை 15-21, 21-13, 21-13 என்ற செட்கணக்கிலும், சாய் பிரனீத் - சீனாவின் ஹுவாங் யுசியாங்கை 21-15, 18-21, 21-13 என்ற செட்கணக்கிலும் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினர்.

மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் பி வி சிந்து, சீனாவின் சென் ஜியாவோஜீன்னை 21-13, 21-18 என்ற நேர்செட்களில் தோற்கடித்து காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

மற்றொரு இந்திய வீராங்கனையான சாய்னா நேவால், மலேசியாவின் சோனியா சியாவை 21-15, 20-22, 21-14 என்ற செட்கணக்கில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

---------------------------

லண்டனில் நடைபெற்று வரும் உலக ஹாக்கி லீக் அரையிறுதி போட்டியில் இன்றிரவு எட்டு மணிக்கு நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா – மலேசியாவை எதிர்கொள்கிறது.

<><><>End News<><><>